## முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.

## அ.வ.எண்.66/2021

2025–ம் வருடம் நவம்பர் திங்கள் 20–ம் நாளன்று வாதி தரப்பு சாட்சியாக வா.சா.1–வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54 விதியின்படி 95வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்.** | : | உமா | **தொழில்** | : | |
| **த/பெ.** | : | | **வட்டம்** | : | |
| **முகவரி** | : | | **மதம்** | : | |
| **ஜாதி** | : | | **வயது** | : | |

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் இளவர் வாதிகளின் தாயாரும், அடுத்து சிநேகதியும், பாதுகாவலரும் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். கடந்த 29.08.2011 ஆம் தேதியிட்ட இளவர் 1 ஆம் வாதி ஹன்சிகாவின் பிறப்புச் சான்றிதழ் அசல் வா.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 22.06.2015 ஆம் தேதியிட்ட இளவர் 2 ஆம் வாதி சஸ்மிகாவின் பிறப்புச் சான்றிதழ் அசல் வா.சா.ஆ.2. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 23.09.2016 ஆம் தேதியிட்ட கரூர் கூடுதல் சார்பு நீதிமன்ற அ.வ.எண்.342/2016ல் மக்கள் நீதிமன்றம் வழங்கிய தீர்வம் சான்றிட்ட நகலின் புகைப்பட நகல் வா.சா.ஆ.3. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 24.11.2017 ஆம் தேதியிட்ட 2 மற்றும் 3 பிரதிவாதிகள் பெயரில் 1 ஆம் பிரதிவாதி ஏற்படுத்தி வைத்த நிபமான, செல்லுந்தன்மையில்லாத

பெயராளவிலான கிரயப்பத்திரம் (பத்திர எண்.1882/2017) சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 24.11.2017 ஆம் தேதியிட்ட 4 மற்றும் 5 பிரதிவாதிகள் பெயரில் 1 ஆம் பிரதிவாதி ஏற்படுத்தி வைத்த நிபமான, செல்லுந்தன்மையில்லாத பெயராளவிலான கிரயப்பத்திரம், (பத்திர எண்.1881/2017) சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 27.02.2021 ஆம் தேதியிட்ட வழிகாட்டி மதிப்பு தேடல் பதிவிறக்கத்தின் திரைப்பதிவு (எல்.ஐ.சி. நகர் கிழக்கு) அசல் வா.சா.ஆ.6. ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்குப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2025.11.20 18:09:13 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.